பதிவு எண் : மு. 6311 ★ தொலைபேசி : 51331 நிறுவியது : 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர் : இரா. செழியன் எம்.ஏ. எம்.டி

மலர் : 15] சென்னை : பங்குனி 1 (14—3—68) வியாழன் ★ வெளியூர் : பங்குனி 2 (15—3—68) வெள்ளி [இதழ் : 227

குடும்பக் கட்டுப்பாடு செய்திடுவீர்

நிலவிய குடிமை தெவிட்டாத குடும்பம், சகர தரச் செழிப்பும் பெற்றுச் சுகமாக வாழவும், அவை வரும் உணவு, உடை உறை புன் வசதிகள் பெறவும், குடும்பத்துக்கு ஒர், இரு குழந்தைகள் இருப்பதே நல்லது.

உணவு உற்பத்தியில் பெற்ற வெற்றி

பருவ நிலை பாதகமாக அமைந்தும் 2 இலட்சம் டன் கூடுதலாக விளைவு

சட்டமன்றத்தில் அமைச்சர் கோவிந்தசாமி பெருமிதம்

சென்னை, மார்ச் 14—

"இடர்பாடுகள் பல இருந்தபோதிலும், இந்த ஆண்டிலே இம் மாநிலத்தின் மொத்த உணவு தானிய உற்பத்தி சுமார் 60 இலட்சம் டன் இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. ஒப்பு நோக்கின், இந்த உற்பத்தியளவு 1966—67-ம் ஆண்டைக் காட்டிலும் 2-இலட்சம் டன் அதிகமாகவும், 1965—66-ம் ஆண்டைக் காட்டிலும் 7.4 இலட்சம் டன் அதிகமாகவும் இருக்கும்.

"மிகு பயன் தரும் உணவுத் தானியங்களை விளைவிப்பதற்காக வும், ஒரு போக நிலங்களை, இரு போக நிலங்களாக மாற்று வதற்கும் மேற்கொண்ட திட்டங்கள் கல்வ வெற்றியடைந்த தாலேயே இவ்வாறு உணவு உற்பத்தி பெருகியது. பருவ நிலைமை வாய்ப்பாக அமையாத இந்த ஆண்டில் இவ்வாறு உணவு உற்பத்தி பெருகியது குறிப்பிடத்தக்கதாகும்".

என்று, வேளாண்மைத்துறை அமைச்சர் திரு. ஏ. கோவிந்தசாமி அவர்கள், இன்று சட்ட மன்றத்தில் தெரிவித்தார்.

"வேளாண்மைத் துறைச் செலவுகளுக்காக 14,48,76,700 ரூபாயும், வேளாண்மை முதலீட்டுச் செலவிற்காக 45,80,000 ரூபாயும் மானியத் தொகைகளாக ஒதுக்கவேண்டும்" என்ற கோரிக்கையை முன்வைத்து அவர் பேசுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

"பொதுவாக வேளாண்மை உற் பத்தியையும் குறிப்பாக உணவு உற்பத்தியையும், மிக குறைந்த காலத்தில், மிக அதிக அளவிற் குப் பெருக்குவதே இந்த அர சாங்கத்தின் கொள்கையாகும்.

நிலமை நாக்கு வாய்ப்பாக இராத போதிலும், கென்ற ஆண்டில் நமது குறிக்கோள் களை நிறைவேற்றுவதில் நாம் பெருமளவு வெற்றி கண்டோம்.

தென் மேற்குப் பருவ மழை போதிய அளவு பெய்யாததால் நீர்த்தேக்கங்களின் நீரளவு குறைந் தது.

இதன் காரணமாகவும், வட கிழக்குப் பருவ மழையின் நில மாறிய போக்கினலும் முக்கிய சம் பாப் பயிரின் பாசனம் பாதிக்கப் பட்டது.

சமனற்றுப் பெய்த பருவ மழை யின் விளைவால் சம்பாப் பயிர் மிக வும் பாதிக்கப்பட்டது.

ஆனல் டிசம்பர் திங்களில் பெய்த மழை பெரும் பகுதிக்குப் பயனுள்ளதாய் இருந்தென்ரு லும், எல்லா இடங்களிலும் அது உதவியாய் இல்லே.

வானம் பார்த்த புன்செய்ப் பயிர்களும் வட கிழக்குப் பருவ மழை தவறியதால் மிகவும் பாதிக் கப்பட்டன. தஞ்சாவூர் சம்பாப் பயிர் வழக்கத்தைவிட ஒரளவு குறைவாகவே விளைந்தது. மழை யின்மையாலும், நீர்த் தேக்கங் களில் போதிய அளவு நீர் இன்மை யாலும், முறை மாற்றுப் பாசன ஏற்பாட்டினேச் செயலுக்குக் கொண்டுவந்த பின்னரும் இரண் டாவது குறுகிய கால அல்லது நடுத்தரப் பயிர்—குறிப்பாக தஞ் சாவூர் சங்கமுகப் பயிர்—குறிப் பாக தஞ்சாவூர் சங்கமுகப் பகுதி யின் தாளடிப் பயிர் மிகவும் பாதிக் கப்பட்டது.

விடைக்கக்கூடிய நீர் நிலேகளி லிருந்து துறையின் விசையேற்றங் னீரப் பயன்படுத்திப் பொதுப் பணித் துறையும், வேளாண்மைத் துறையும், வருவாய்த் துறையும் பயிர்களேக் காக்கப் பெரு முயற்சி மேற்கொண்டன.

இவ்வாறு, பெருமுயற்சி எடுக் கப்பட்டிருந்தும் தாளடிப் பயிரில் 50 சதவிகிதத்திற்கு மேற்பட்ட பகுதி பில் விளேவு குறைவாகவே இருக்கு மெனத் தெரிகிறது.

கீழ்ப் பவானி நீர்த் தேக்கத்தில் குறைந்த அளவே நீர் இருந்தமை பால், இரண்டாம் போகத்திற்குப் பாசன வசதி அளிக்க முடிய வில்லே.

எனினும், டிசம்பர் திங்களில் பெய்த மழையால் செங்கறப்பட்டு, வட ஆற்காடு மாவட்டங்களி லுள்ள ஏரி, குளங்களில் நீர் நிறைந்துள்ளமையால் நவரை பயிர் விளேச்சல் நல்ல வகையில் இருக்குமென எதிர்பார்க்கப்படு கிறது.

என்றும், முன்னரே குறிப்பிட் டுள்ளவாறு, குறிப்பாக திருச்சிராப் பள்ளி, சேலம், கோயம்புத்தூர், திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களிலே வானவரி புன் செய்ப் பயிர்கள் மிகவும் பாதிக்கப் பட்டுள்ளன.

உழவர்களுக்கு சிக்கல்கள் என்ன என்பதையும் அந்த சிக்கல் களே நீக்க அரசாங்கம் என்ன செய்ய வேண்டுமென்று அவர்கள் எதிர்பார்க்கிறர்கள் என்பதையும் நன்கு கண்டறியும் பொருட்டும் வேளாண்மை உற்பத்தியைப் பெருக்க அவர்களுக்கு உதவும் பொருட்டும் உழவர்களுக்கான கருத்தரங்குகள் மாவட்டங்களில் இம்மாதத்தின் எல்லா மாவட் டங்களிலும் நடத்தப்பட்டன. மாண்புமிகு முதலமைச்சரும், மற்ற அமைச்சர்களும், வேளாண்மைத் துறை அதிகாரிகளும் அவை அனைத்திலும் பங்கு கொண்டனர். உழவர்களின் வேண்டுகோள்களே வகைப்படுத் தி கொள்ளும் முயற்சிகளும் மேற் கொள்ளப்பட்டன.

இம்மாநிலத்திலே உணவு உற் பத்தியைப் பெருக்குவதற்காக வேளாண்மைத்துறை—மிகுபயன் தரும் தானிய ரகத் திட்டம்; ஒரு போக நிலங்களே இரு போக நிலங் களாக்கும் திட்டம்; சிறு பாசன வசதிகளேப் பெருக்கும் வேலத் திட்டம் ஆகிய மூன்று திட்டங் களேச் சிறப்பாக மேற்கொண்டது.

'சிறுவாணி ஆற்றில் அணைக்கட்டு வேலே எதுவும் துவக்கப்படவில்லே'

கேரள சட்டமன்ற புகார் பற்றித் தமிழக பொறியியல் அதிகாரி மறுப்பு

"கேரள அரசின் கவனத்துக்கு வராமலே, கேரள எல்லையில் உள்ள சிறுவாணி ஆற்றுப் பகுதியில் தமிழகம், நீர்த் தேக்க அலு வலர்னேத் துவக்கி நடத்தி வருகிறது" என்று, கேரள சட்டமன்றத் தில் கூறப்பட்ட புகாருக்கு, கோவை நகராட்சிப் பொறியியல் அதிகாரி மறுப்புத் தெரிவித்துள்ளார்.

"கேரள அரசின் ஒப்புதலுடன் கட்டப்படவிருக்கும் அணைக்கான அடையாளத் தூண்களிதான் அந்தப் பகுதியில் நிறுத்தப் பட்டிருக்கிறதே தவிர, அணைக் கட்டுக்கான ஆய்வு வேலேகள், முன் னது மதியின்றி நடை பெறுவதாகக் கூறியிருப்பது தவறு"

என்று, பொறியியல் அதிகாரி குறிப்பிட்டிருக்கிறர்.

"அங்கே வைக்கப்பட்டுள்ள அடையாளத் தூண்கள், அணைக் கட்டுக்கான ஆரம்ப வேலே களாகக் கேரள அரசின் ஊழி யர்களால் தவருகக் கருதப்பட் டிருக்கிறது"

எனவும் அவர் விளக்கம் தெரிவித் துள்ளார்.

பிரச்சினேயில் வந்திருக்கும் சிறு வாணி நீர்த் தேக்கத்தை கேரள அரசுடன் பேசி முடித்த பிறகு ரூ. 4.8 இலட் சம் செலவில் அமைக்கும் திட்டம் ஒன்று தமிழக அரசி டம் இருக்கிறது எனவும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இந்தியை எதிர்க்கும் மாணவர்கள் திறமை குறைந்தவர்களா?

காங்கிரசு உறுப்பினருக்கு முதலமைச்சர் அண்ணு அளித்த பதில்

சென்னை, மார்ச் 14—

'தமிழகத்தில் இந்தி எதிர்ப்புக் காரணமாகப் பள்ளிகள் மூடப் பட்டு படிப்பு பாதிக்கப்பட்ட தால், இவ்வாண்டு எஸ்.எஸ்.எல். சி. தேர்வில் நாற்றுக்கு 25 மதிப்பெண்கள் பெ ற் ரு ல் போதும் என அரசு அறிவிக் கு மா ?'

என்று, இன்று சட்டமன்றத்தில் காங்கிரசு உறுப்பினர் திரு. மார்ட் டின கேட்டார்.

இதற்கு அண்ணு அவர்கள் பின் வருமாறு பதிலளித்தார் :—

"இவ்வாண்டு எஸ்.எஸ்.எல்.சி. தேர்வில் மாணவர்கள் பாதிக் கப்பாதலில் இருப்பதற்கு என் னென்ன செய்யலாம் என்பது பற்றி யோசிக்கலாம்; ஆனல் திரு. மார்ட்டின் அவர்கள், 'இந்தியை எதிர்க்கும் மாண வர்கள் நூற்றுக்கு இருபத் தைந்து மதிப்பெண்கள்தான் பெறுவார்கள்' என்ற கருத் தில், அவர்களுடைய நிறமை யைக் குறைவாக மதிப்பிடுவது குறித்து வருந்துகிறேன்."

'டிரைவர்'க்குப் பதில் 'வலவர்'

பொதுப்பணியமைச்சர் கண்டெடுத்த புதையல்

சென்னை, மார்ச் 14—

இன்று சட்டமன்றத்தில் போக்கு வரத்துத் துறைத் தொடர்பான கேள்விகளுக்குப் பொ தப் ப ணி அமைச்சர் திரு. மு. கருணநிதி அவர்கள் பதிலளிக்கையில், ஒட்டு நர் (Driver) என்பதற்குப் பதில் 'வலவர்' என்ற சொல்லேயே பயன் படுத்தினர்.

'வலவர்' என்ற சொல்லைப் பற் றிக் காங்கிரசு உறுப்பினர் ஒருவர் ஐய விஞவெழுப்பினர்.

அதற்கு அமைச்சர் பதிலளிக் கும் வகையில்,

"'வலவர்' என்ற சொல் இலக்கியச் சொல்; 'வலவ ரில்லா வாணூர்தி போல' என்ற சொற்ருெடர் இலக்கி யத்தில் உள்ளது" என்ருர்.

மாணவர்கள் அல்லர் -- பெற்ருேரே!

சென்னை, மார்ச் 14—

"எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு முடிந்த தும் தேர்வு விடைத் தாள்களே திருத்துபவர்களிடம் மாணவர் கள் அனுப்பி, அதிக மதிப்பெண் கள் போடும்படிச் செய்து தேர்வு பெற முயலுவதைத் தடுக்கவும், இப்போதுள்ள பரீட்சை முறை யைத் திருத்தியமைக்கவும் அரசு ஆவன செய்யுமா ?"

என்று இன்று சட்டமன்றத்தில் கழக உறுப்பினர் எம். எஸ். சிவ சாமி கேட்டார்.

"பரீட்சை முறையைத் திருத்தி அமைப்பது பற்றி யோசிக்கப் படுவது ஒருபுறமிருக்க, உறுப் பினர்கள் குறிப்பிட்டதுபோல், மாணவர்கள், பரீட்சைத் தாளேத் திருத்தும் ஆசிரியர்களே அனுகுவதாகத் தெரியவில்லே; பெற்ருேர்கள்தான் அனுகுவதா கத் தகவல்கள் வருகின்றன"

என்று அமிழர் அண்ணு அவர்கள் மதிலளித்தார்கள்.

நீதிபதி விரும்பாதது 13!

ஆபத்துக்குள்ளான தேதியோ 13!

நீதிமன்றப் பணியில் ஈடுபட்டி ருக்கும்போதே நேற்று மாலே 2-30 மணியளவில் கத்தி குத்துக்கு ஆளான சுப்பீம் கோர்ட் நீதிபதி ஏ. என். குரோவருக்கு பதின்மூன்றும் இலக்கம் பிடிக்காத ஒன்று எனத் தெரியவருகிறது!

சிகிச்சைக்காக எடுத்துச் செல் லப்பட்ட அவர், வெலிங்டன் மருத்துவமனையின் 13-ம் எண் அறையில் அனுமதிக்கப்பட்ட போது, அவரது வேண்டு கோளுக்கிணங்கவே அவர் 12-ஏ எண்ணுள்ள அறைக்கு மாற்றப்பட்டார்!

13-ம் எண் ஏன் தமக்குப் பிடிக்க வில்லே என்பதற்கு அவரே தர் துள்ள விளக்கத்தில்,

"சுப்பீம் கோர்ட்டில் 13-ம் எண்ணுள்ள அறையில் தான் எனக்கு இந்த ஆபத்து நேர்ந்தது"

என்று கூறியதைக் கேட்டு அருகி லிருந்த செய்தியாளர் ஒருவர்— அவருக்கு கினவூட்டும் வகை யில்—தெரிவித்ததாவது :—

"ஐயா! இன்றைத் தேதி கூட 13 தான்!"

மதுராந்தகம் வட்டத்தில் அரசுப் பேருந்துகள்

சென்னை, மார்ச் 13—

"மதுராந்தகம் வட்ட தினிலும், மதுராந்தகம் வழியாகவும், 1—3—67 முதல் 6-புதிய வழித் தடங்களில், அரசினர் பேருந்து கள் (விரைவுப் பேருந்துகளும்) விடப்பட்டிருக்கின்றன"

என்று சட்டமன்றத்தில், கொளத் தூர் கோதண்டம் கேள்விக்குப் பொதுப் பணித்துறை அமைச்சர் பதிலளித்தார்.

சோஷலிசத்திற்கு எதிரான திசையில் காங்கிரசாட்சி!

பிர்லா குடும்பங்கள் வளரவே வழி செய்துள்ளது

தொழில் துறையில் தென்னகத்துக்கு இழைக்கப்பட்ட அநீதி

நாடாளுமன்றத்தில் இரா. செழியன் கண்டனம்

புதுடில்லி, மார்ச் 13—

நாடாளுமன்றத்தில் டாக்டர் அசாரி அறிக்கையின்மீது தி. மு. கழக உறுப்பினர் தோழர் இரா. செழியன் தந்த கருத்துரையாவது:—

"தொழில் அனுமதி வழங்கும் முறையில் ஏற்பட்டுள்ள குறைபாடுகளை ஆராய்ந்து, பேராசிரியர் ஹசாரி தந்துள்ள இந்த அறிக்கையைக் கவனிக்கும் பொழுது, இதனுடன் ஒட்டி பேராசிரியர் எம். எஸ். தாக்கர் தலைமையில் இயங்கும் குழு ஆராய்ந்து தரவிருக்கும் அறிக்கையையும் சேர்த்து கவனித்தால், இன்னும் அதிகமான விவரம் நமக்குக் கிடைத்திருக்கும்; ஆனால் இப்பொழுது கிடைத்துள்ள விவரங்களை மட்டும்—ஹசாரி அறிக்கையின்மீது வைத்து நாம் கவனிக்கிறோம்.

எனக்கு முன்னதாகப் பேசிய காங்கிரசுக் கட்சியைச் சார்ந்த உறுப்பினர், 'சோஷலிசம் என்றால் அதற்குப் பலவிதமான பொருள்கள் உண்டு; பலவிதமான போக்குகள் உண்டு' என்று கூறினார்.

சோஷலிசத் தத்துவத்துக்கு தனக்கு ஏற்ற வகையில் பலவித அர்த்தங்களைக் காங்கிரசுக் கட்சி கற்பித்துக்கொள்ளலாம்; பேசிய காங்கிரசு உறுப்பினர் மனத்தில் பட்டதுகூட, சோஷலிசத் தத்துவமாகிவிடலாம்!

நிலைமைக்கு சமாதானம் கூறவேண்டாம்

ஆனால், தொழில் வளர்ச்சியைப் பற்றிச் சில திட்டவட்டமான கோட்பாடுகளை அரசாங்கம் வரையறுத்து வெளியிட்டுள்ளது. அரசியல் சட்டத்தில் 39-வது விதிமுறையின் கீழ் கூறப்பட்டுள்ளதாவது:—

"நாட்டின் பொருளாதார வசதிகளை நிர்வகிப்பதிலும், சொந்தமாக்குவதிலும், எல்லா மக்களுக்கும் நலன் பயக்கும் விதத்தில் பரவலான திட்டத்தை மேற்கொண்டும்—

"பொருளாதார முறையில் தனி ஆதிக்க நிலை உருவாகாமலும், செல்வம் அனைத்தும் ஓரிடத்தில் சேர்ந்துவிடாமலும்—

அரசாங்கத்தின் கொள்கை வகுக்கப்பட வேண்டும்."

இரண்டாவது, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டங்களிலும் இந்தக் கொள்கை வலியுறுத்தப்பட்டுள்ளது.

திட்டத்தின் குறிக்கோள்களைப் பற்றி விளக்கும்பொழுது,

"சமூகத்தில் வசதியற்று தாழ் நிலையில் உள்ளவர்களுக்குத் திட்டத்தின் பலன்கள் அதிகமாகக் கிடைக்கச் செய்யவும், வருமானமும் செல்வமும் ஓரிரு இடங்களில் குவிந்துவிடாமல் தடுக்கவும் வகை செய்யவேண்டும்"

என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

தொழில்துறை எவ்வாறு முன்னேற்றமடைய வேண்டுமென்று அரசாங்கத் தரப்பில் கொண்டு வரப்பட்டு இந்தப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தொழிற் கொள்கைத் தீர்மானத்தில், மூன்று முக்கிய கருத்துக்கள் வலியுறுத்தப்பட்டுள்ளன:—

1. எந்தத் தொழில் பகுதியிலும் தனிப்பட்ட ஆதிக்கம் தலையெடுக்காமலும், செல்வம் குறிப்பிட்ட சில இடங்களில் குவிந்துவிடாமலும் பார்ப்பது;
2. பெரிய தொழில்களில் போட்டியினின்றும் சிறு தொழில்களைக் காப்பாற்றுவது;
3. தொழில் வளர்ச்சி சமமாக—பரவலாக எல்லா வட்டாரங்களிலும் ஏற்பட வகை காண்பது.

இந்த அடிப்படையில்தான் ஐந்தாண்டுத் திட்டமும், தொழில் வளர்ச்சிக் கோட்பாடும் அமைந்துள்ளன.

இவற்றை நான் சுட்டிக்காட்டுவதற்குக் காரணம், சோஷலிசத் தத்துவத்துக்குப் பலவித விளக்கங்கள் கூறுவதன்மூலம், உள்ள நிலைமைக்குச் சமாதானம் கூறவேண்டாம் என்பதற்குத்தான்.

தனிஆதிக்கம் உருவாக வழிகோலக் கூடாது

சோஷலிசம் பற்றி எந்தவிதமான விளக்கங்கள் தரப்பட்டபோதிலும், தொழில் வளர்ச்சி எப்படி இருக்கவேண்டும் என்பதற்குத் திட்டவட்டமான கொள்கை தரப்பட்டுள்ளதை நாம் மறந்துவிடக்கூடாது.

தொழில் துறையில் முழுச் சுதந்தரம் தனிப்பட்டவர்களுக்கு இருக்கவேண்டும் என்று நினைப்பவர்கள்கூட, தனி ஆதிக்கம் உருவாவதை ஒத்துக்கொள்ள மாட்டார்கள் என்று நினைக்கிறேன்.

அமெரிக்காவில்கூட, தனி ஆதிக்கத்தைத் தடுக்கச் சட்டங்கள் உள்ளன.

தொழில் வளர்ச்சியும், செல்வப் பெருக்கமும், தனிப்பட்ட முதலாளிகளுக்கு நல்ல இடமும் உள்ள அமெரிக்காவிலேயே தனி ஆதிக்க வளர்ச்சிக்குத் தடை இருக்கிறதென்றால், இந்தியா அதிகமான அக்கறையுடன் ஆதிக்க வளர்ச்சிக்கு இடமளிக்காமல் பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

நடைமுறையில் நாடு கண்டது என்ன?

'தனி ஆதிக்கம் சிறிது காலத்துக்கு இருப்பது நல்லது' என்று சிலர் வாதிடுகிறார்கள்; தொழில் வளர்ச்சியின் ஆரம்பக் காலத்தில் தனி ஆதிக்கத்தை ஒத்துக்கொள்ளத்தான் வேண்டியிருக்கும்' என்று கூறுகிறார்கள். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், இந்தக் கருத்து ஆராயப்பட்டு,

"ஆரம்பக் காலத்தில் தனிப்பட்ட ஆதிக்கத்துக்கு இடம் தந்துவிட்டால், பிறகு வளர்ந்த நிலையில் அதை அகற்றுவது முடியாத காரியமாகிவிடும்"

என்று கூறப்பட்டுள்ளது.

சோஷலிசம் பற்றிக் காங்கிரசுக் கட்சி பேசுகிறது; 'தொழில் துறையில் தனி ஆதிக்கம் கூடாது' என்று அரசியல் சட்டத்தில் எழுதியுள்ளார்கள்' தீர்மானங்களில் நிறைவேற்றுகிறார்கள்; தேர்தல் அறிக்கையில் வைத்துக்கொள்கிறார்கள்.

இவ்வளவும் நல்ல முறையில், ஏட்டில்—எழுத்தில் இருக்கின்றன; நடைமுறையில்—அரசாங்க நடவடிக்கையில் ஒன்றையும் காணோம்!

சரியான திசை அல்ல!

குறிக்கோள் சோஷலிசமாக இருக்கலாம்; ஆனால் செல்லும் பாதை வேறு விதமாக இருக்கிறது!

ஓர் ஊரை நோக்கிச் சென்று கொண்டிருந்த ஒருவன், வழியிலிருந்த ஒருவரைப் பார்த்து—குறிப்பிட்ட ஊரின் பெயரைச் சொல்ல—'எவ்வளவு தூரம்?' என்று கேட்டானாம்; வழியில் இருந்தவர், '24,990 மைல்கள், என்றாராம்; 'இந்த இடத்திலிருந்து 10 மைல் தூரம்தான் இருக்கும் என்று சற்றுமுன் ஒருவர் கூறினாரே' என்றான் வழிப்போக்கன்; 'இங்கிருந்து பத்து மைல் தூரம்தான் இருக்கும்; ஆனால், நீங்கள் சரியான திக்கில் போகாமல் எதிர்ப் பக்கமாகப் போய்க்கொண்டிருக்கிறபடியால், பூமியைச் சுற்றிக் கொண்டு வரவேண்டும்; அந்தப்படி பார்த்தால், 24,990 மைல்கள் தூரம் நடந்தாக வேண்டும்' என்று விளக்கம் தந்தாராம்.

குறிப்பிட்ட ஊரை அடைய, செல்லுகின்ற பாதை—திக்கு சரியாக இருக்கவேண்டும்.

சமதர்ம நோக்கத்தை அடைய, காங்கிரசு எடுத்துக்கொண்டுள்ள திசை, சரியானதல்ல!

அளவுகடந்த ஆதிக்கம் வளர்ந்துவிட்டது!

'தொழில் வளர்ச்சியில் அரசாங்கம் மேற்கொண்ட குறிக்கோள்கள் நிறைவேறவில்லை' என்று டாக்டர் ஹசாரியின் அறிக்கை கூறுகிறது.

மாறாக, எந்தெந்தக் குறைபாடுகளை நீக்குவதற்காகத் துவங்கியதோ, அந்தக் குறைபாடுகளை அரசாங்கம் வளர்த்துவிட்டது.

1957 முதல் 1966 வரை அரசாங்கத்தின் லைசென்சு முறையில், குறிப்பிட்ட சில தொழில் அதிபர்களின் ஆதிக்கம் அளவு கடந்து வளர்ந்துவிட்டது!

குறிப்பாக, பிர்லா குடும்பத்தின் ஆதிக்கம் வளர்ந்துள்ளதை ஹசாரி அறிக்கை தொகுத்துக் காட்டுகிறது!

தந்துள்ள விளக்கமே 'குறிக்கோளுக்குப் போதுமே!

ஹசாரி அறிக்கையில், 'புள்ளி விவரங்கள் முழுமையாக இல்லை' 'என்று சிலர் குற்றஞ் சாட்டினார்கள்; டாக்டர் ஹசாரி அவர்களே அதை ஒத்துக் கொண்டுள்ளார்கள்.

விவரங்கள் இன்னும் அதிகமாக இருக்குமே தவிர குறைவாக இருக்காது.

இப்பொழுது தரப்பட்டுள்ள புள்ளி விவரங்களில் குறைபாடுகள் இருந்தால் பிர்லா நிர்வாகமே அதை மறுத்திருக்கும்.

பிர்லா நிர்வாகத்தின் தலைமை அதிகாரியாக விளங்கும் திரு. டி. பி. மண்டலியா என்பவர், ஹசாரி அறிக்கை வெளிவந்த பின்னர், பத்திரிகை நிருபர்களிடம் சில விளக்கங்களைத்தந்தார்.

1967 ஆகஸ்டு 18-ந் தேதி பத்திரிகை நிருபர்களிடம் பேசும் போது, ஹசாரி அறிக்கையின் புள்ளிவிவரங்களை அவர் மறுக்கவில்லை; அவர் கூறியதெல்லாம்,

"பிர்லா கம்பெனிகள் என்று கூறப்படுபவை எல்லாம் பிர்லா குடும்பத்தினருக்குச் சொந்தமானவையல்ல; பொதுமக்களின் பங்குகளில் வசூலான தேசிய அமைப்புகள்"

என்பதுதான்.

பொதுமக்களின் பங்குகளினால் உருவான தேசிய நிறுவனங்கள் என்றால், பிர்லா குடும்பத்தினர் அவற்றுக்காக அவ்வளவு வீண் சிரமங்களை ஏற்றுக்கொள்ள வேண்டாம்.

பொதுமக்களின் பணத்தினால் வளர்ந்த அந்தத் தேசிய அமைப்புகளைத் தேசியமயமாக்கிவிடலாம்.

இதே விளக்கத்தினால், பிர்லா கம்பெனிகளை மட்டுமல்ல--மற்றுமுள்ள பல பெரிய கோடீசுவரர்களின் கம்பெனிகளைத் தேசியமயமாக்கிவிடலாமே!

லைசென்சு பெறுவதிலும் ஏகபோக ஆதிக்கம்!

ஹசாரி அறிக்கையின் விளக்கம் பிர்லாவின் ஆதிக்கவளர்ச்சியை மட்டுமல்ல—லைசென்சு முறையில் உள்ள குறைபாடுகளைச் சுட்டிக்காட்டுவதாகும்.

லைசென்சுகளைப் பெறுவதில், அவற்றைத் தாம் பயன்படுத்துவதற்காக அல்ல—மற்றவர்களுக்கு அது பயன்படாமல் இருக்க வேண்டுமென்பதற்காகப் பல சமயங்களில் அனுமதிகள் பெறப்பட்டுள்ளன! இந்தப் போட்டியால் தொழில் வளர்ச்சியில் தடுமாற்றம்—சீரான வளர்ச்சியின்மை முதலியன உண்டாகியுள்ளன.

புதிய தொழிற்சாலை அமைக்கக் கூடுய சக்தி உள்ளவர்கள் புதிய லைசென்சுகளை வாங்கியுள்ளனர்; 'இதில் தவறு இல்லை' என்று சிலர் வாதிடுகிறார்கள்.

அதிலும், 'பிர்லா குடும்பத்தினர்க்கு அதிக சக்தி இருந்ததால், அதிக லைசென்சுகள் அவர்களுக்குக் கிடைத்தன' என்று கூறப்பட்டது; இது நடைமுறையில் சரியாக இல்லை. தரப்பட்ட லைசென்சுகளில் பாதிக்குமேல் பிர்லா கம்பெனிகளால் பயன்படுத்தப்படவில்லை என்று தெரிகிறது.

மேலும், தக்க முதலீடும், சக்தியும் இல்லாத பல பிர்லா கம்பெனிகள் லைசென்சுகளை வாங்கியுள்ளன.

ஹசாரி அறிக்கையின் 9-வது பக்கத்தில் அந்தப் பட்டியல் தரப்பட்டுள்ளது:—

"பல தொழில்களுக்குத் திரும்பத் திரும்ப லைசென்சு கேட்பதில் பல பிர்லா கம்பெனிகள் முன்வந்தன: சில சமயங்களில் அவற்றுக்கு லைசென்சுகளும் கிடைத்துள்ளன; ஆராய்ந்து பார்த்ததில், லைசென்சு தரப்பட்ட பல கம்பெனிகளில் — குறிப்பாக ஆரியவர்த்தா, பிகானீர் கமர்ஷியல், ஈஸ்டர்ன் எக்ப்மெண்ட் போன்றவற்றில், மூலதனம் மிகமிகக் குறைவாக இருந்தது!

"பிர்லா கம்பெனிக் குழுவைச் சேர்ந்த 'மஞ்சுசி' என்ற ஒரு கம்பெனிக்கு செயற்கைப் பட்டு, காகிதம், இரும்பு வார்ப்படம், பருத்தி நெசவு போன்று பல தொழில்களுக்கு லைசென்சுகள் தரப்பட்டுள்ளன.

"இவ்வளவு பெரிய தொழில்களை ஆரம்பிக்க முன்வந்த அந்த 'மஞ்சுசி' கம்பெனிக்கு இருந்த மொத்த மூலதனம் ரூ 5,000 மட்டும்தான்!"

'பிர்லா சாம்ராஜ்யம்' உருவாக்கப்பட்டது!

ஐயாயிரம் ரூபாய் மட்டும் மூலதனமாக உள்ள ஒரு கம்பெனிக்கு பல லைசென்சுகள் எப்படிக் கிடைத்தன என்பது ஆச்சரியமானதே!

தொழிற்சாலை நடத்தும் சக்தி உள்ளவர்களுக்கு லைசென்சுகள் தரப்பட்டன என்று கூறமுடியாது.

"லைசென்சு பெறும் சக்தி—சாமர்த்தியம் உள்ளவர்கள், லைசென்சுகளைப் பெற்றுக் கொண்டார்கள்" என்று கூற

(3-ம் பக்கம் பார்க்க)

எதிர்க் கட்சித்

தலையே இந்தக் கதி!

"நான் ஒன்றும் தாம்பரத்துக்குப் புதியவன் அல்லன்; இதற்கு முன்பும் தாம்பரம் வந்திருக்கிறேன்; ஆனால், இப்போது வந்திருப்பது, வேலை போன தாசில்தார் போல--எதிர்க் கட்சிக் தலைவனாக வருகிறேன்.....நான் இப்போது, இராமபிரான் காட்டில் வனவாசம் செய்ததுபோல் இருக்கிறேன்; சட்டமன்றத்தில் எனக்கெதிரே நான் பார்க்கிறவர்கள் எனக்கு அப்படித்தான் தோன்றுகிறார்கள்!

"ஒரு நாளைக்கு அரக்கனைப்போல் தோன்றுகிறார்கள்; ஒரு நாள் காட்டு மனிதரைப்போல் வருகிறார்கள்; முன்பெல்லாம் அவர்கள் குளிக்கக்கூட மாட்டார்கள்; தலையில் எண்ணெய் வைக்க மாட்டார்கள்; எங்கேயோ இருந்து எழுந்து ஓடிவந்துவிடுவார்கள்; வெற்றிலைப் பாக்குக் காவியும், கறுப்பு -- சிவப்பு துண்டுந்தான் அடையாளம்! இப்போது கொஞ்சம் பரவாயில்லையே! குளிக்கிறார்களோ இல்லையோ—தலையை சீவிக்கொண்டு வருகிறார்கள்."

★

இது ஏதோ காங்கிரசின் கடைத்தரப் பேச்சாளர் பேசியது என்று நினைக்கிறீர்கள்? தப்பு, தப்பு!

சட்டமன்றத்தில் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்களின் 'கண்களில் விரலை விட்டு ஆட்டி' 'சனநாயகம் கற்றுக்கொடுக்கிற' (திரு. டி. எம். தனபால் வரவேற்புரையில் அறிவித்தபடி) மதிப்புக்குரிய எதிர்க் கட்சித் தலைவர் உயர்திருவாளர் பி- ஜி. கருத்திருமன் அவர்கள். 9—3 68 சனிக்கிழமையன்று தாம்பரத்தில், காங்கிரசுக் கூட்டத்தில் நிகழ்த்திய கொள்கை விளக்க உரை அது!

இதுதான் பேச்சுரிமை! தலையே இப்படி இருந்தால்..... பிறகு கேட்கவா வேண்டும்? பானை சோற்றுக்கு ஒரு சோறு போதும் --- பதம் பார்க்க!

நாடாளுமன்றத்தில் இரா. செழியன் பேச்சு

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

லாம்; அதிலும், பிர்லா கம்பெனிகள் அதிசயிக்கத்தக்க விதத்தில், ஏராளமான லேசென்சுகளை வளர்த்துவிட்டார்கள்.

"பிர்லா சாம்ராஜ்யம்" என்று கூறப்படும் அளவுக்கு ஒரு 'தொழில் சாம்ராஜ்யம்' உருவாக்கப்பட்டுள்ளது!

இருபது ஆண்டுகளுக்குமுன், 'பிர்லா மாளிகையின் மர்மங்கள்' என்ற நூல், தமிழ்நாட்டில் பலரால் படிக்கப்பட்டது! மகாபாரதம்—மதனகாமராசன் கதை—மர்மம் நிறைந்த துப்புறியும் கதைகளோப் படிப்பதுபோல, அந்த நூல்ப் பொதுமக்கள் படித்தனர். ஹசாரியின் இந்த அறிக்கையும், அதைப்போல படிக்கப்படலாம்.

சீர்குலைவுக்குக் காரணம்

பிர்லாவின் குடும்பத்துக்கு எவ்வளவு லேசென்சுகள் கிடைத்தன என்று கணக்கிடுவதில், அவர்களுமீது தனிப்பட்டு எந்த அக்கறையோ, ஆத்திரமோ கிடையாது; நாட்டின் தொழில் வளர்ச்சியை எந்த அளவு பாதிக்கிறது என்பதுதான் முக்கியமானது.

பிர்லா ஆதிக்கம் இல்லையென்றால், மற்றொரு பிரபல ஆதிக்கம் வந்திருக்கும்.

தனிப்பட்டவர்களோக் குறை கூறிப் பயனில்லை; அரசாங்க முறையில் — அரசாங்க நிர்வாகத்தில் உள்ள குறைபாடுகள்தான் எல்லாவற்றுக்கும் அடிப்படைக் காரணமாகும்.

லேசென்ச முறையில் உள்ள பலவீனம், லேசென்ச தரும் இடத்திலுள்ள அதிகாரிகளுக்கு உள்ள பலவீனம், எல்லாம் சேர்ந்து சீர்குலைவைச் செய்துவிட்டன!

ஆராயுமா அரசு?

சில முக்கியமான உயர் பதவிகளில் இருந்த அதிகாரிகள் 58-வது வயதில் ஓய்வுபெற்றதும், தனிப்பட்ட முறையிலான கம்பெனிகளுக்கு வேலை பெற்றுச் சென்றுவிடுகின்றனர்.

1966 நவம்பர் மாதத்தில் விடுதலை பெற்ற ஏற்றுமதி—இறக்குமதி துணை ஆணையர், 1967 மார்ச் மாதத்தில் ஒரு பெரிய தொழில் அதிபரிடம் ஆலோசகர் வேலைக்குச் சென்றுவிட்டார்.

அதே தொழில் அதிபரிடம், ஓய்வு பெற்ற ஓர் இரயில்வே போர்டு தலைவர்—வருமான வரி ஆணையர்—காப்பு வரித் தலைவர்—நேரடி வரி அமைப்பின் தலைவர்—இரயில்வே நிதி ஆணையர்—மற்றெரு ஏற்றுமதி—இறக்குமதி துணை ஆணையர் ஆகியோர்—ஓய்வுக்குப்பின்—உயர்ந்த சம்பளங்களில் வேலைக்கு அமர்ந்துள்ளனர்!.....

தாரகேஸ்வரி சின்கா:—"அந்தத் தொழில் நிறுவனம் எது?"

இரா. செழியன்:—"பிர்லாவின் கம்பெனிகள்தாம்!"

அரசாங்க முறையில் உள்ள பலவீனம்—அதை நிர்வகிக்கும் அதிகாரிகளிடம் உள்ள பலவீனம்—இரண்டையும் அரசாங்கம் நன்கு ஆராயவேண்டும்.

தனிப்பட்ட குடும்பங்களிடம் குவியும் பொருளாதார அதிகாரம் மட்டுமல்ல—தனிப்பட்ட வர்த்தர்களில் குவியும் பொருளாதார அதிகாரத்தையும் நாம் கணக்கிடவேண்டும்.

"வட்டாரங்களுக்கிடையே உள்ள ஏற்றத் தாழ்வுகளே நீக்க வேண்டும்" என்பது, ஐந்தாண்டுத் திட்டத்தினும், தொழில் வளர்ச்சித் திட்டத்திலும் ஒத்துக் கொள்ளப்பட்ட கொள்கையாகும்.

"ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் தெற்குப் பகுதி புறக்கணிக்கப் பட்டிருக்கிறது" என்று நாங்கள் அடிக்கடி எடுத்துக்காட்டியிருக்கிறோம்.

ஹசாரே அறிக்கையின்படி பார்த்தால், தென்னஞ்டினர் போட்டுள்ள முதலீடு—மொத்த முதலீட்டில் — 7.8 சதவீதம்தான் இருக்கிறது. இந்தியா முழுவதிலும் உள்ள மக்கள் தொகையில், 100-க்கு 25-க்கு மேல்—நான்கில் ஒரு பகுதி—தென்னஞ்ட மக்கள் உள்ளனர்.

எல்லா வட்டாரங்களிலும் ஒரே விதமான பொருளாதார வளர்ச்சியும் முதல் போடும் சக்தியும் இருக்கும், தென்னஞ்ட மக்களால் 100-க்கு 25 பங்கு முதலீடு போடப்பட்டிருக்கும். ஆனால் தென்னஞ்டினரால் 1.8 சதவீத முதலீடே போடப்பட்டுள்ளது!

பம்பாய்—குசராத்—மார்வார்—பகுதியினரைப் பார்த்தால், இந்தியாவில் உள்ள முதலீட்டில் 45 சதவீதம் அவர்களால் போடப்படுகிறது! இது 99 வட்டாரத்துக்குக் கிடைக்கக் கூடிய பொருளாதார சக்தியை குறிப்பதாகும்.

தொழில் ஆதிக்கக் குழுவினருக்குக் கிடைக்கும் சக்தி பெரும்பாலும் பாங்கி நிறுவனங்களிலிருந்து கிடைக்கிறது.

பாங்கி சக்தியை வைத்துக் கொண்டுதான் அவர்கள் தொழிற்சாலைகளைத் திறக்கவும் மூடவுமான வலிவைப் பெறுகின்றனர்.

பாங்கி உரிமையை அவர்களிடமிருந்து எடுத்தாலன்றி, இப் பொருதுள்ள பொருளாதார ஆதிக்க முறையை மாற்றியமைக்க முடியாது.

கடைசியாக, 'பாங்கி தேசியமயம்' என்று கூறும்பொழுது, ஆயுள் இன்சுரன்ச தேசியமயம்போல் அதுவும் ஆகிவிடக் கூடாது என்பதுதான்!

ஆயுள் இன்சுரன்ச தேசியமயமாக்கப்பட்டபொழுது, யார் யாருக்கு அதில் நம்பிக்கை இல்லாதிருந்தோ அவர்களிடம் அந்த நிறுவனம் ஒப்படைக்கப்பட்டது.

சோஷலிசத்தில் நம்பிக்கையில்லாதவர்களிடத்தில் சோஷலிச முறை ஒப்படைக்கப்படுவதுபோல், தேசியமயத்தில் கம்பிக்கை இல்லாதவர்களிடத்தில் தேசியமயமாக்கப்பட்ட நிறுவனம் ஒப்படைக்கப்பட்டது. அதுபோல் இப்பொழுதும் ஆகிவிடக் கூடாது!"

தமிழகத்தில் ஆகாஷ்வாணி இல்லை

டில்லியிலிருந்து ஒலிக்கக் கோரிக்கை

சென்னை, மார்ச் 13—

"மதுரையில் வானொலி நிலையம் ஒன்றை ஏற்படுத்தும்படி மத்திய அரசினை இந்த அரசு கேட்டுக்கொள்ளவில்லை; மத்திய அரசைக் கேட்பது பற்றி யோசிக்கப்படும்"

என்று செய்தித் துறை அமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து, சட்டமன்றக் கேள்வி நேரத்தில் தெரிவித்தார்.

"தமிழகத்தில் உள்ள எந்த வானொலி நிலையமும் ஆகாஷ்வாணி என்று அறிவிக்கவில்லை; டில்லி வானொலி நிலையம்தான் அப்படி அறிவிக்கிறது; தமிழக வானொலி நிலையங்களில் 'வானொலி' என்றே வழங்கப்பட்டு வருகிறது; டில்லியிலிருந்து தமிழகத்திற்கு ஒலிபரப்பாகும் செய்திகளின்போதும் 'வானொலி' எனறே அறிவிக்கு மாறும் மத்திய அரசை இந்த அரசு வற்புறுத்தி வருகிறது"

என்று கே. வினுபகதனின் கேள்விக்குப் பதிலளிக்கையில் அமைச்

"டிவிஎஸ்ஸில் ரீடிரெடிங் செய்ததால் டயர் அதிக மைல் உழைத்தது"

டயர்களுக்காக நான் சேவு செய்த பணம் எனக்கில் அடங்குமா? எனது லாபத்தையெல்லாம் அதற்குப் பறி விழுங்கி கொண்டுவிட்டது.

என்னுடைய நண்பர் சோலித்தன் போட்டர்த்தொழிலில் முதிர்ந்த அனுபவமுள்ளவர். அவரிடம் கலந்து ஆலோசித்தேன். டயர்களே எங்கே ரீடிரெடிங் செய்கிறீர்கள் என்று கேட்டேர். "எங்கே செய்தால் என்ன? எல்லோரும் ஒரேமாதிரி தானே" என்றேன்.

"அங்குதான் தவறு செய்கிறீர்கள். ரீடிரெடிங் நல்ல முறையும் செய்யவேர். மட்டமான முறையிலும் செய்வர்கள். என்னுடைய அனுபவத்தில் எல்லோரும் ஒரே மாதிரியல்ல என்பதைக் கண்டேன். விஸ்வநாத ரீதியில் ரீடிரெடிங் செய்யவேண்டுமே செல்ல வேண்டும்...

...டியில்ல் தான் தந்த்த இடம் என்பதைக் கண்டு சொன்னேன். அவர்கள் முப்பத்தைந்து செய்திருக்கர். எற்துன்றன், மன, சிறு கண்ணுத்துன்றன் ஆணிகள் முதலியவற்றை அப்புறப்படுத்தி டயர்களுக்குத் தீங்கு சோர்மல் ரீடிரெடிங் செய்கிறார்கள்...அதுமட்டுமல்ல, காம்பரசர்பரை கொடுவல் இருக்கும் பொருட்டு குளிர்ச்சர்தன அறைவில் வைத்திருந்து திரர்கள். மற்ற எந்த ரீடிரெடிங் செய்பவர்களும் டயர்களை சுட்டுக் கருப்பாக்கி ரீடிரெட் செய்து டயர்கள் அதிக மைல்கள் உழைக்கின்றன" என்று சோலித்தன்



"நான் ஒருமுறை டிவிஎஸ்லில் ரீடிரெடிங் செய்தேன். அது முதல் நான் வேறுவாரிடமும் சென்றதில்லை. டிவிஎஸ் ரீடிரெடிங் மிகவும் சிறந்தது. அதனால் டயருக்கான முன்னும் செலவு பாதிக்கு மேல் குறைந்தது."

உங்கள் டயர்களை டிவிஎஸ்லில் விஞ்ஞான ரீதியில் ரீடிரெடிங் செய்து நடைமுறைச் செலவுகளைக் குறையுங்கள்



TVS

சுந்தரம் பிஸ்டன்ஸ்ரிங்ஸ் லிமிடெட்

தொழிற்சாலைகள்: மல்லாங்கிணர் • சோமநாத்தர் • மதுரை புதுக்கோட்டை • சேத்தியாத்தோப்பு • திருநெல்வேலி

நீதிக்குப் பாதுகாப்பு?

"நாங்கள் நீதிபதிகள்; இதுபற்றி
ஏதும் சொல்வதற்கில்லை"

என, தோழமை நீதிபதி குரோவர் தாக்கப்பட்ட சம்பவம் குறித்துச் செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவித்திருக்கும் தலைமை நீதிமன்ற நீதிபதிகள் இதயதுல்லா—வைத்திலிங்கம் ஆகியோர், நீதித்துறையின் புனிதத் தன்மை என்ன—சிறப்புத் தன்மை என்ன—என்பதை மிகத் தெளிவாக—ஆனால் மறைமுகமாக எடுத்துக்காட்டியிருக்கிறார்கள்!

சுதந்தர இந்தியாவின் சுப்ரீம் கோர்ட் வரலாற்றில், 1953-க்குப் பின் இரண்டாவது தடவையாக இந்தச் சம்பவம் நடைபெற்றிருக்கிறது!

15 ஆண்டுகளுக்குமுன் இதுபோன்ற திடுக்கிடும் தாக்குதலை நடத்தியவன், புத்தி சுவாதீனமில்லாத ஒருவன்!

ஆனால், நேற்றைய சம்பவத்துக்குக் காரணமான 37 வயதுடைய மன்மோகன்தாஸ் என்பவனோ, மற்றவர்களது சிந்தனையைச் சற்றுக் குழப்பும் வகையில் பின்னர் உணர்வுகளைக் கொண்டவனாகத் தெரிகிறான்!

"பெரிய—திடுக்கிடும் காரியம் ஏதாவது செய்யவேண்டும்" என்ற ஆசையால் உந்தப்பட்டு, இம்முயற்சியை மேற்கொண்டவன்—என்று, அவனைப்பற்றி உடனடியாக வந்திருக்கும் மருத்துவ அறிக்கை கூறியிருக்கிறது!

கடந்த ஒன்றரை மாத காலமாகப் புதுடில்லி இரயில் நிலையத்திற்கு அருகில் கடை ஒன்றில் வேலை செய்துவந்த அவனது கடந்த கால—எதிர்கால உண்மைகள் மட்டுமே உள்ளபடி மற்றவர்களைத் திடுக்கிட வைப்பதாக இருக்கிறது!

★ கம்பெனி ஒன்றில் பணியாற்றியபோது இலண்டன்வரை சென்று சிகிச்சை பெற்றிருக்கிறான்!

★ பம்பாய் உயர் நீதிமன்றத்தில் விளக்கினை உடைத்த குற்றத்துக்காக ஏழு மாத காலச் சிறைத் தண்டனை பெற்றிருக்கிறான்!

★ விடுதலையானவுடன் அசாம் போகும் வழியில் புதுடில்லிக்கு வந்திருக்கிறான்!

★ பின்னர், கிழக்குப் பாகிஸ்தானுக்கு தப்பித்துச் செல்லும் முயற்சிகளுடன் வங்காளம் சென்றிருக்கிறான்!

★ அவன் உள்ளத்தில் அரசாங்கத்துக்கு எதிராகப் பகை உணர்ச்சி வேரோடி இருப்பதாகப் போலீசு அறிக்கை கூறுகிறது!

'குற்றவாளி சாதாரணமான மனிதன் அல்ல'

என்பதும்

'குரோவர் அளித்துக்கொண்டிருந்த தீர்ப்புக்குத் தொடர்புடையவன் அல்ல'

என்பதும் இதனால் கிடைக்கும் முடிவுகளாக இருக்கின்றன.

"சம்பவம் நடப்பதற்குமுன், சுமார் இரண்டு மணி நேரத்திற்கு முன்கூட்டியே வந்திருக்க வேண்டும்" என்று கருதப்படுகிற குற்றவாளி, 13-ம் எண்ணுள்ள அறைக்குள் நுழைந்ததும்—தாக்குதல் கோலத்தில்—நீதிபதிகளுக்குக் கீழே அமர்ந்துகொண்டிருந்த 'கோர்ட் மாஸ்டர்'முன் பாயந்திருக்கிறான்!

'கோர்ட் மாஸ்டர்' அதிர்ச்சியுற்றுத் துள்ளிக் குதிப்பதற்கிடையில், குற்றவாளி, நீதிபதி குரோவர்மீது பாய்ந்திருக்கிறான்!

கத்திக் காயம் ஏற்பட்ட நிலையிலும் குரோவர், குற்றவாளியின் கையிலிருந்த ஆயுதத்தினை அப்புறப்படுத்தி, தமக்கும் தற்காப்புத் தேடியிருக்கிறார்! அருகே இருந்த இரு நீதிபதிகளும், குற்றவாளி மேற்கொண்டு தாக்குதலை நிகழ்த்தாமல் இருக்க குரோவருக்கு உதவியிருக்கின்றனர்!

துவக்கம் முதல் இறுதி வரை இந்த சம்பவம் நடப்பதற்குக் குறைந்தது சில நிமிடங்களாவது பிடித்திருக்கும்!

"குற்றவாளி எப்படி தனக்கென வழி அமைத்துக் கொண்டு நீதிமன்ற அறைக்குள் நுழைந்திருக்க முடியும்?"

என்ற கேள்வியைவிட,

"தாக்குதல் துவங்கியது முதல் இறுதிவரையில், நீதிபதிகள், தங்களுக்குள்ளாகவே தற்காப்பு பெற்றிருக்கிறார்கள்"

என்ற நிலைதான் கவனிக்கத் தக்கதாக இருந்திருக்கிறது.

அதிர்ச்சிக்குள்ளான மக்களவை, 'இந்தச் சம்பவம் குறித்து தீவிர ஆராய்ச்சி தேவை' என, ஒருமித்த குரல் கொடுத்திருப்பது, இந்த அடிப்படையின்பாற்பட்டதுதான்!

"நீதிபதிகளே, நீதிமன்றத்திலேயே பாதுகாப்பற்ற தன்மைக்கு ஆளாவது அவமானப்படத்தக்க செயல்"

என்று நீதித்துறையின் சிறப்புக்காக மட்டும் தனித்து கவலை தெரிவித்திருப்பவர்கள் ஒருபுறமிருக்க,

"தெருக்களில் பெண்கள், பயமின்றி நடமாட முடியாத நிலையின் வளர்ச்சிதான் இது"

என, இந்தியத் தலைநகரில் நிலவிவரும் பாதுகாப்பற்ற தன்மையின் மொத்த வளர்ச்சியின் திடுக்கிடத்தக்க திருப்பமாக இதனைக் கருதியிருப்பவர்கள்தான் பெருவாரியாக இருக்கின்றனர்!

குடிமக்கள் முழுமைக்கும் மொத்தமாகப் பாதுகாப்பு அளிப்பதுதான் நீதித்துறை! அதனைக் கட்டிக்காப்பவர்கள்தான் நீதிபதிகள்! அவர்கள் பணியாற்றும் 'கோயில்'கள்தான் நீதிமன்றங்கள்!

'அங்கு, பாதுகாப்பு தேவை இல்லை' என்ற காலம் போய், 'அங்கேயும் ஏன் பாதுகாப்பு இல்லை?' என்ற கேள்விக்கு இடம் பிறந்துவிட்டது!

"சட்டம்—அமைதி எங்கே?" என, 'இங்கே' தேடுபவர்கள்—'அவை இரண்டும் குலைந்துவிட்டன' எனக் குறைபடுபவர்கள், இந்தத் தலைநகர் சம்பவத்தினை ஆர அமரச் சிந்திக்கவேண்டும்!

—எஸ். ஆர்.

வலியா? ஜலதோஷமா?

பத்து சக்திமிக்க மருந்துகள் சேர்ந்தது

அமிர்தாஞ்சனம்

உங்களுக்கு உடனடி நிவாரணம் அளிக்கிறது

சக்தி வாய்ந்த பத்து மருந்துகள் கொண்ட அமிர்தாஞ்சனம் வலிகளைப் போக்கி ஜலதோஷத்தை நீக்குவதற்கென்றே பிரத்தியேகமாக தயாரிக்கப்பட்டது. எழுபது ஆண்டுகளாக லட்சக் கணக்கான குடும்பங்களில் பயன்பட்டு வரும் கைகண்ட நிவாரணி அது.

வலிகளுக்கு: தசைவலி, தலைவலி, சுளுக்கு, அல்லது மூட்டு வலி எதுவாக இருந்தாலும், வலியுள்ள இடத்தில் சிறிது அமிர்தாஞ்சனம் தடவுங்கள். சில நிமிடங்களில் நிவாரணம் ஏற்படுவதை உணர்வீர்கள்!

ஜலதோஷத்துக்கும், மார்புச் சளிக்கும்: சாதாரண ஜலதோஷமானால் மூக்கின் உட்புறத்திலும் மூக்கின் கீழும் அமிர்தாஞ்சனம் தடவுங்கள்; அல்லது சிறிதளவு அமிர்தாஞ்சனம் எடுத்து வெந்நீரில் இட்டு, ஆவியை சுவாசியுங்கள். மார்புச் சளியானால், மார்பில் அமிர்தாஞ்சனம் தடவுங்கள். மிகமிக விரைவில் நல்ல நிவாரணம் ஏற்படுவதைக் காண்பீர்கள்.

ஒவ்வொரு முறை பயன் படுத்துவதற்கும் சிறிதளவு அமிர்தாஞ்சனமே போதும்; ஆகவே ஒரு பாட்டில் உங்கள் குடும்பத்துக்கு மாதக் கணக்கில் வரும். அமிர்தாஞ்சனத்தை எப்பொழுதும் கையோடு வைத்திருங்கள்.

அமிர்தாஞ்சனம்
கையடக்கமான, குறைந்த விலை டின்களிலும் கிடைக்கிறது.

அமிர்தாஞ்சன் லிமிடெட்,
மதராஸ்-பம்பாய்-கல்கத்தா-டெல்லி.

am-3769

நடக்க இருப்பவை

16-3-68

புதுவயல்

தி.மு.க. சார்பில் மாலை 5-30 மணிக்கு அஞ்சல் நிலையப் முன்னிலையில்; தலைவர்: சா. சிதம்பரம்; பேசுவோர்: ஆ. திராவிடமணி, பெரி. தில்லையரசன், வீர. கருத்தான், டாக்டர் வி. மீரா முகையதீன், மற்றும் பலர். (அன்று மாலையில் அறிஞர் அண்ணா மன்றத்தை ஆ. திராவிடமணி திறந்துவைப்பார்.)

சீர்காழி

நகர தி.மு.க. சார்பில் மாலை 6 மணிக்கு வைரவன் கோடியில்; தலைவர்: மா. செல்லத்துரை; பேசுவோர்: பெ. சீனிவாசன் எம்.எல்.ஏ., சே. சேவற்கொடியோன், என். கிட்டப்பா எம்.எல்.ஏ., டி.வி. சம்பத், வை.சு. மணி, சோ.சு. மணி.

பொன்மலை—மே.க. கோட்டை

தி.மு.க. சார்பில் மாலை 7 மணிக்கு மேலக்கற்கண்டார் கோட்டை திரு.வி.க. திடலில்; தலைவர்: ச. கணேசக்கண்டியர்; பேசுவோர்: கே. இராசா முகம்மது பி.ஏ., ஜி. பராங்குசம், ஏ. நடராசன்.

மத்திய அமைச்சர் சந்திரசேகர்

திருமணி தொழுநோய் விடுதியைப் பார்வையிடுவார்

செங்கற்பட்டுத் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் சிட்டிபாபு அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க மத்திய சுகாதார அமைச்சர் டாக்டர் சந்திரசேகர் அவர்கள், திருமணியில் உள்ள மத்திய அரசின் தொழுநோய் மருத்துவ விடுதியைப் பார்வையிடவும், கூட்டுறவுப் பண்ணை பற்றிப் பரிசீலிக்கவும், 15-3-68 பிற்பகல் 2-மணியளவில் சிட்டிபாபுவுடன் செங்கற்பட்டு செல்கிறார்.

கைத்தறி பொருட்காட்சி

34, பாந்தியன் சாலை எழும்பூர்,
சென்னை-8.

விசேஷ தள்ளுபடி 10%

நிகழ்ச்சி நிரல்

15-3-1968 வெள்ளி—மாதர் தினம்

மாலை 6.00 மணி தலைவர்: திருமதி சத்தியவாணிமுத்து அரிசன நல. செய்தித்துறை அமைச்சர்
பேச்சாளர்: செல்வி கே. ஜகதாம்பாள் பி.ஏ. (ஹானர்ஸ்), எல்.டி. பள்ளிக் கல்வித் துணை இயக்குநர், சென்னை
மாலை 7.00 மணி நாடகம்: 'சத்ரபதி சிவாஜி'—புதுமைக் கலா மன்றம்

16-3-1968 சனி

மாலை 6.00 மணி தலைவர்: திரு. மு. கருணாநிதி, போக்குவரத்து மற்றும் பொது மராமத்துத்துறை அமைச்சர்
பேச்சாளர்: திரு. காஞ்சி மணிமொழியார்
மாலை 7.00 மணி கலைநிகழ்ச்சி: குழந்தைகளுக்கான கைத்தறியாடை அணியும் போட்டியும் மௌன நாடகப் போட்டியும் (Tableau)

17-3-1968 ஞாயிறு

மாலை 6.00 மணி தலைவர்: டாக்டர் அபிபுல்லா பேக் எம்.பி.பி.எஸ்., சென்னை நகர மேயர்
பேச்சாளர்: திரு. ஏ. கே. கப்பையா எம் எல்.ஏ., திரு. சி. பாலகப்பிரமணியன் எம்.ஏ., எம்.லிட்.,
மாலை 7.00 மணி நாடகம்: 'மழை'—சுந்தரனார் நாடக மன்றம்

கண்காட்சி நேரம் தினசரி மாலை 3 மணியிலிருந்து 10 மணி வரை — அனுமதி இலவசம்

மறைமலையடிகள் ஆராய்ச்சிக் குழுக் கூட்டம்

சென்னை நச்சீரர் கழகச் சார்பில் மறைமலையடிகள் ஆராய்ச்சிக் குழுக் கூட்டம், 16-3-68 மாலை 6-15 மணிக்கு மாநிலக் கல்லூரித் தமிழ்த்துறை அறையில் நடைபெறும்; திரு. இராம. அரங்கண்ணல் எம்.எல்.ஏ. தலைமையில் ஔவை து. நடராசன் எம்.ஏ., எம்.லிட்., 'வள்ளலாரும் வண்டமிழும்' என்ற பொருள் குறித்துச் சொற்பொழிவாற்றுவார்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.